**முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்**

**O.S.No.243/2022**

17.06.2026 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி திருமதி.S.சீதா, Bench Clerk Gr-1 அவர்களால் சாட்சிக்கு பிரமாணம் செய்விக்கப்பட்டது.

IA No.9/2025 மனுவில் 17.06.2026 தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் பிரதிவாதி சாட்சி 2 திரு.ஜெயச்சநிரன் த/பெ.சிவசங்கரன் திரும்ப அழைக்கப்பட்டு 3ம் பிரதிவாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி:

நான் ஏற்கனவே பிரதிவாதி சாட்சி 2 ஆக இவ்வழக்கில் சாட்சியம் அளித்து வாதி தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்பட்டுள்ளேன். நான் பின்னர் மனுதாக்கல் செய்து ஆவணங்கள் என் தரப்பில் குறியீடு செய்ய அனுமதிகேட்டு அந்த மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. கூடுதல் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலமும் ஏற்கனவே 17.11.2025 அன்று தாக்கல் செய்துள்ளேன். என் தரப்பு ஆவணங்களாக கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 24.01.2011 - எனக்கு ஜனார்த்தனன் என்பவர் தனக்காகவும் தன் மைனர் மக்களுக்காகவும் எழுதிக்கொடுத்த கிரையபத்திரம் இணையதள சான்றளிக்கப்பட்ட நகல் பிவாசாஆ.1

2. 23.12.2014 - திரு.ஜனார்த்தனன் எனக்கு எழுதிகொடுத்த பிழைதிருத்தல் பத்திரம் இணையதள சான்றளிக்கப்பட்ட நகல் பிவாசாஆ.2

3. 11.03.2015 - மண்டகப்பட்டு சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா இடையில் கடன் பெற நான் எழுதிக்கொடுத்த Memorandum of deposit of title deed online Certified copy பிவாசாஆ.3

4. 04.08.2021 - மேற்படி அடமான கடனை திருப்பி செலுத்தியதற்கு வங்கி வழங்கிய அடமான வரவு ரசீது online Certified copy பிவாச.ஆ.4

5. 28.06.2018 - விழுப்புரம் வட்டாட்சியர் என் பெயரில் வழங்கிய பட்டா (எண்.566) online Certified copy பிவாச.ஆ.5

6. - என் பெயரில் உள்ள அ பதிவேடு இணையதள நகல் பிவாசாஆ.6

7. 09.08.2007 - புதுச்சேரி கட்டிட மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் நலவாரியம் எனக்கு வழங்கிய அடையாள அட்டை புகைப்பட நகல் (கொத்தனார் பணி) பிவாசாஆ.7

8. 25.05.2009 - என் திருமண பதிவு சான்றிதழ் (Extract) பிவாசாஆ.8

9. 31.03.2006 - வாதி கஸ்தூரி - முருகன் ஆகியோர் திருமண அழைப்பிதழ் பிவாசாஆ.9

(பிவாசாஆ.7 ஆவணம் அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டு அசல் அடையாள அட்டை திருப்பிகொடுக்கப்பட்டது)

(குறுக்குவிசாரணை தொடர்ச்சி வாதி தரப்பு வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.)

ARUMUGAM MANIMOZHI

Digitally signed by ARUMUGAM MANIMOZHI
Date: 2026.06.17 18:08:56 +0530

Principal District Judge,

Villupuram.